FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319421

1. District : Coimbatore PS: Vigilance and Anti corruption Year: 2026. FIR No.: 03/2026/AC/CB Date: 02.03.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள் 0900 hrs.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7(b) & 7(b) r/w 12

(ii) Act சட்டம்: 1988, as amended in 2018. Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 19.02.2026 Date to : 25.02.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 1100 hrs Time to : 1610 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 28.02.2026 Time : 1230 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) GD.Vol I Time : 1230 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.02.2026 நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Tamil typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 7 km, South
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Door no. 1, Kempatty colony street no. 1, Coimbatore-1.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. Rajendran (b) Father's/ Husband's Name : Ramasamy,
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 66/2026. (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : — (g) Address : Door no. 1, Kempatty colony street no. 1, Coimbatore-1.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Mohan, Assistant / Tap Inspector, Water supply department, Corporation Central Zone, Coimbatore Corporation, Coimbatore city.
2. Eswaran, Plumber

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet herewith enclosed.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

02-03-2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

02/03/2026.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court 08.30 hrs on
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும் 02.03.2026.

Name. பெயர் T. Prabudass,
Rank: நிலை Inspector of Police,
VSAE, Coimbatore.

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2026/ AC/CB, u/s. 7(b), 7 (b) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.C-8319421-ன் தொடர்ச்சி.

28.02.2026-ம் தேதி சனிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு காவல் ஆய்வாளர் J.பிரபுதாஸ் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர் மாவட்டம், கெம்பட்டி காலனி, வீதி எண்-1, கதவு எண்.1 என்ற முகவரியை சேர்ந்த திரு.ராமசாமி என்பவரது மகன் திரு.R.ராஜேந்திரன் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டல, குடிநீர் வழங்கள் பிரிவில் டேப் இன்ஸ்பெக்டராக பணிபுரியும் திரு.மோகன் என்பவர் புகார்தாரரின் வீட்டிற்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கியதற்காக பணம் ரூ.5000/-ஐ அவருக்காகவும், பிளம்பர் திரு.ஈஸ்வரன் என்பவருக்காகவும் லஞ்சம் கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 02.03.2026-ம் தேதி காலை 07.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2026/AC/CB, u/s. 7(b), 7(b) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரிகள் டேப் இன்ஸ்பெக்டர் திரு.மோகன் மற்றும் பிளம்பர் திரு.ஈஸ்வரன் என்பவர்கள் மீது குற்ற வழக்கு பதிவு

செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் R.ராஜேந்திரன், வயது 66, த/பெ.ராமசாமி, கதவு எண்.1, கெம்பட்டி காலனி வீதி எண்-1, கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. அய்யா, நான் கோவை, கெம்பட்டி காலனி வீதி எண்.1, கதவு எண்.1-ல் உள்ள எனது சொந்த வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். இந்த வீடானது எனது மற்றும் என்னுடைய மனைவி பெயரில் உள்ளதால் இரண்டு வரிவிதிப்பு எண் உள்ளது. நான் குடியிருந்து வரும் வீடு இறந்துபோன என்னுடைய மனைவி மல்லிகா அவர்கள் பெயரில் உள்ளது. மேற்படி வீடு மூன்றுதளங்கள் கொண்டது அதில் நான் 2-ம் தளத்தில் எனது கடைசி மகன் வெங்கடேஸ்பிரபு, இரண்டாவது மகள் ராஜலட்சுமியுடன் குடியிருந்து வருகிறேன். தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள மூன்று வீடுகளில் வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள். மேற்படி நான் குடியிருந்துவரும் வீட்டை ஒட்டினாற்போல் உள்ள கதவு.எண்.8A, கெம்பட்டி காலனி, கோயம்புத்தூர் என்ற முகவரியில் என்னுடைய பெயரில் உள்ள மூன்று தளங்கள் கொண்ட வீட்டில் 5 குடும்பங்கள் வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள். மேற்படி இரண்டு வீடுகளும் 1998-ம் வருடம் ஒன்றாக இணைத்து கட்டப்பட்டது. என்னுடைய மனைவி பெயரில் உள்ள வீட்டிற்கு மட்டும் 1996-ம் ஆண்டு வாங்கிய குடிநீர் குழாய் இணைப்பு உள்ளது. என்னுடைய பெயரில் உள்ள வீட்டிற்கு தனியாக குடிநீர் இணைப்பு இல்லாததால் தண்ணீர் பற்றாக்குறை இருந்து வந்தது, எனவே மேற்படி வீட்டிற்கு புதிய குடிநீர் இணைப்பு வேண்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் கெம்பட்டி காலனி மாநகராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்றபோது நான் 03.09.2025-ம் தேதி விண்ணப்பம் கொடுத்தேன். என்னுடைய விண்ணப்பத்தை பெற்று எனக்கு TN/MAWS/CBE/I/USL/03SEP25/14904084, நாள்.03.09.2025 என்ற எண்ணில் ஒப்புகை சீட்டு வழங்கினார்கள். அன்றைய தினமே கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டல குடிநீர் வழங்கல் பிரிவில் இருந்து உதவி பொறியாளர் திரு.சக்திவேல், டேப் இன்ஸ்பெக்டர் திரு.மோகன் மற்றும் பிளம்பர் திரு.ஈஸ்வரன் ஆகிய மூவரும் மேற்படி முகவரியில் உள்ள என்னுடைய வீட்டிற்கு வந்து கள ஆய்வு செய்தார்கள். அதன் பின்பு கடந்த 22.09.2025-ம் தேதி கோயம்புத்தூர் மாநகராட்சி,

மத்திய மண்டலத்தில் இருந்து என்னுடைய கைபேசி எண்.9843970478-க்கு அழைத்து புதிய குடிநீர் இணைப்பு கட்டணமாக ரூ.18,570/- செலுத்தவேண்டும் என்று சொன்னதின் பேரில் நான் அடுத்த நாள் 23.09.2025-ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் அலுவலகத்திற்கு சென்று ரூ.18,570/-ஐ செலுத்தி ரசீது எண்.162/CTR/01/25-26/0007942 பெற்றுக்கொண்டேன். அதன் பின்பு ஒரு வாரம் கழித்து என்னுடைய முகவரிக்கு தபால் மூலமாக கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலத்தில் இருந்து உதவி ஆணையாளர் அவர்களின் ந.க.எண்.12334/2025/டி2(ம), நாள்.29.09.2025-ம் தேதியிட்ட கடிதத்துடன் வேலை உத்தரவு எண்.416/25/D2 (C) கிடைத்தது. அதன் பின்பு கடந்த 19.02.2026-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டல பிளம்பர் திரு.ஈஸ்வரன் என்பவர் என்னுடைய வீட்டிற்கு வந்து குடிநீர் இணைப்பு கொடுக்க வந்திருப்பதாக சொன்னார். அப்போது அங்கு வந்த டேப் இன்ஸ்பெக்டர் திரு.மோகன் என்பவர் இன்னிக்கு குடிநீர் இணைப்பு கொடுத்து விடுவதாகவும், நாளைக்கு மீட்டர் பொருத்திக்கொடுப்பதாகவும் கூறி தனக்கு தனியாக ரூ.6,000/- கொடுக்க வேண்டும் என்றும் அதனை நாளைக்கு பிளம்பர் திரு.ஈஸ்வரன் அவர்களிடம் கொடுத்து விடும்படி சொன்னார். அன்றே குடிநீர் குழாய் இணைப்பு வேலை முடிந்தது. அதனைத்தொடர்ந்து கடந்த 21.02.2026-ம் தேதி சனிக்கிழமை குடிநீர் இணைப்பு மீட்டர் பொருத்துவதற்காக பிளம்பர் திரு.ஈஸ்வரன் அவர்கள் வந்தார். மீட்டர் பொருத்திவிட்டு டேப் இன்ஸ்பெக்டர் திரு.மோகன் அவர்கள் கேட்டதாக மாலை சுமார் 05.30 மணிக்கு பணம் ரூ.6,000/- கேட்டார். நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என்றும் இரண்டு நாட்கள் கழித்து தருவதாகவும் சொன்னேன். அதற்கு அவர் நீங்கள் டேப் இன்ஸ்பெக்டர் திரு.மோகன் அவர்களிடம் பேசிக்கொள்ளுங்கள் என திரு.மோகன் அவர்களின் செல்நம்பர் 9003788768-ஐ என்னிடம் கொடுத்தார். அதன் பின்பு நான் கடந்த 23.02.2026-ம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு டேப் இன்ஸ்பெக்டர் திரு.மோகன் அவர்களை என்னுடைய கைபேசி எண்.9843970478-ல் இருந்து அவருடைய கைபேசி எண். 9003788768-க்கு அழைத்து என்னுடைய வீட்டிற்கு குடிநீர் இணைப்பு கொடுத்து மீட்டர் பொருத்திவிட்ட விபரம் சொன்னபோது, அவர் பிளம்பர் ஈஸ்வரன்

வந்தாரா என கேட்டார். நான் அவரிடம் ஆமாம் அவர் வந்தார் என்று சொன்னேன். மேலும் அவரிடம் சார், ஈஸ்வரன் நீங்கள் தனியாக கேட்டதாக சொல்லி பணம் ரூ.6,000/- கேட்டார், கொஞ்சம் பணம் குறைத்து கொள்ளுங்கள் என சொன்னேன். நான் உங்களுக்கு கம்மியாக தான் சொல்லியிருக்கேன் எனவும், பக்கத்து தெருவில் L.G தோட்டத்தில் உள்ள வீட்டிற்கு ரூ.8000/- வாங்கியுள்ளதாகவும், உங்களிடம் ரூ.6,000/- தான் கேட்பதாகவும் சொன்னார். நான் அவரிடம் மீண்டும் பணம் குறைக்க சொன்னபோது அவர் மறுத்துவிட்டார். அதன் பின்பு 25.02.2026-ம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு செல்போனில் என்னை தொடர்பு கொண்டு, எங்கு இருக்கிறீர்கள் என்று கேட்டார். நான் வீட்டில் இருக்கிறேன் என்று சொன்னேன். அவர் வீட்டிற்கு வருவதாக சொன்னார். அதன்பின்பு 10 நிமிடம் கழித்து என்னுடைய வீட்டிற்கு நேரில் வந்து என்னிடம் அவர் ஏற்கனவே புதிய குடிநீர் இணைப்பு கொடுத்ததற்காக கேட்ட பணம் ரூ.6,000/-ஐ அப்போது வேண்டும் என்று கேட்டார். நான் அவரிடம் பணம் குறைத்துக்கொள்ள சொன்னபோது அவர் ரூ.5,000/- கொடுக்க சொன்னார். நான் சார் பணம் ரூ.5000/- அதிகமாக உள்ளது என்று சொன்னபோது, உங்களுக்காகத்தான் இவ்வளவு இறங்கி வருவதாகவும், மற்ற இடங்களில் ரூ.8000/- அல்லது ரூ.9000/- தான் வாங்குவதாகவும் சொன்னார். மேலும் பிளம்பர் ஈஸ்வரனுக்கும் பணம் கொடுக்க வேண்டும் எனவும் சொன்னார். நான் வீட்டின் கழிவுநீர் அடைப்பு சரி செய்யும் வேலை செய்து பணம் செலவாகிவிட்டது என்று சொன்னேன். அப்போது அவர் இந்த பக்கம் ஒரு வேலையாக வந்ததாகவும் பணம் ரெடியாக இருந்தால் வாங்கிட்டு செல்லலாம் என்று வந்ததாகவும் சொன்னார். நான் அவரிடம் தற்போது என்னிடம் பணம் இல்லை என்றும் எனது மகனிடம் தான் பணம் கேட்டு வாங்க வேண்டும் என்று சொன்னபோது, அவர் பணம் ரெடியானதும் கூப்பிடுமாறு சொன்னார். நான் அவரிடம் நீங்கள் என்ன போஸ்டிங்கில் இருக்கிறீர்கள் என்ற கேட்டபோது அவர் டேப் இன்ஸ்பெக்டராக இருப்பதாகவும், AE திரு.சக்திவேல் அவர்களின் அசிஸ்டன்ட் எனவும், தனக்கும் ஒரு வருடத்தில் JE வந்துவிடும் எனவும் சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அவர்கள் லஞ்சம் கேட்டது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது மனஉளைச்சலை ஏற்படுத்தியது இவ்விசயத்தை ஆலோசித்ததில் லஞ்சம்

வழங்காமல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறுதியான முடிவு செய்தேன். நான் யோசனை செய்து பார்த்ததில் என்னுடைய வீட்டிற்கு குடிநீர் இணைப்பு கொடுத்ததற்காக டேப் இன்ஸ்பெக்டர் திரு.மோகன் மற்றும் பிளம்பர் திரு.ஈஸ்வரன் ஆகியோர்கள் லஞ்சமாக கேட்கும் ரூ.5,000/-ஐ கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் பணம் ரூ.5,000/- லஞ்சம் கேட்கும் டேப் இன்ஸ்பெக்டர் திரு.மோகன் மற்றும் பிளம்பர் திரு.ஈஸ்வரன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்துடன் கடந்த 23.02.2026-ம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு எனக்கும் டேப் இன்ஸ்பெக்டர் திரு.மோகன் அவர்களுக்கும் இடையே நடந்த செல்போன் உரையாடல் பதிவு மற்றும் 25.02.2026-ம் தேதி மாலை சுமார் 04.10 மணிக்கு என்னுடைய வீட்டில் எனக்கும் திரு.மோகன் அவர்களுக்கும் இடையே நேரில் நடைபெற்ற உரையாடல் குரல் பதிவுகளை எனது போனில் இருந்து தனித்தனியாக இரண்டு DVD-ல் பதிவிறக்கம் செய்து எனது புகாருடன் இணைத்துள்ளேன். நாள்:28.02.2026, இடம்: கோவை, இப்படிக்கு, sd.XXXXX 28.02.2026 (R.Rajendran). Respected Madam, Received the complaint on 28.02.2026 at about 12.30 hrs. sd.XXXXX, 28.02.2026, Inspector of Police, V&AC, CBE. Respected Madam, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.03/2026/AC/CB, u/s. 7(b), 7(b) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 02.03.2026 at about 0700hrs sd.XXXXX, 02.03.2026, Inspector of Police, V&AC, CBE. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

02/03/26.

(J.பிரபுதாஸ்),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.